

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை நேசக்கரம் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்வினை அடுத்து 7,8,9,18,22,23,24, 25,37,38ஆகிய வார்டுகளில் 11இடங்களில் மாநகர கழக செயலாளர் ஆ.செந்தில் தலைமையில் கழக நிர்வாகிகளுடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் இனிப்புகள் வழங்கி கழக கொடியினை ஏற்றி வைத்தார்கள். நிகழ்வுகளில் கவிச்சுடர் கவிதைப் பித்தன், வண்ணை அரங்கநாதன், வை முத்துராஜா எம்.எல்.ஏ, பி.ராஜேஸ்வரி, மு.லியாகத் அலி, சுப. சரவணன், சு.சண்முகம், என்.சாத்தையா, அ.ரத்தினம், எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, சி. அரங்கநாயகம், கவிவேந்தன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, மா.மணிவேலன், பா. ரெங்கராஜன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# கழக சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும் 100 பொதுக்கூட்டங்கள் நடத்திடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் - சபாபதி மோகன் பங்கேற்பு!

அரியலூர், நவ. 30-

அரியலூர் மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மஹாலில் கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டமன்றத் தொகுதி மேலிட பொறுப்பாளர்கள் அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வை யாளர் முனைவர் சபாபதிமோகன், குன்னம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் கலா சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் குறித்து பேசியதாவது

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய கொடிகம்பங்களிலும், புதுப்பிக்கப்பட்ட கொடிகம்பங்களிலும் கழக இருவண்ணக் கொடியினை ஊராட்சி மற்றும் நகரப் பகுதி வார்டுகள் தோறும் ஏற்றி நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட இயக்கத்தின் எதிர்காலம் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவரகளின் பிறந்தநாளை முன்னிட்டு அரியலூர் மாவட்டம் முழுவதும் கழக இருவண்ணக் கொடியேற்றி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்ட திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக சொற்பொழிவாளர்கள் மற்றும் என் உயிரினும் மேலான இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் 100 பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடத்துவது என இக்கூட்டத்தில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் சிப்காட் தொழில் பூங்காவினை தாயுள்ளத்துடன் தொடங்கி வைத்ததோடு ஜெயங்கொண்ட நகரில் மாவட்ட திமுக சார்பில் அமைக்கப்பட்ட நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலையினை திறந்து வைத்து பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய தமிழ்நாடு திராவிட மாடல் முதல்வர் தளபதியார் அவர்களுக்கு மனம் கனிந்த நன்றிகளை மாவட்ட தி.மு.க. சார்பில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அரியலூர் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திட 101 கோடி வழங்கிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு மனம் கனிந்த நன்றியை மாவட்ட தி.மு.க. சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார் .

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி, மாவட்டத் துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு,

மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெங்க.முருகன், கோ. அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், ஒன்றிய பொறுப்பாளர் தனவேல், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப. கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, ஆர்.எம். அன்பழகன், சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் தெய்வ. இளையராஜா, கே.சி.லூயி கதிரவன், எஸ். ஆர்.இராமராஜன்,

க.தர்மதுரை, என்.ஆர். ராமதுரை,தங்க. ராமகிருஷ்ணன், ஆதி. க.இளங்கோவன், அந்தோணிசாமி, பானுமதி ராஜேந்திரன், செ. இளஞ்செழியன், எம். ஜி. ராஜேந்திரன், மீனா சாமிநாதன், ரவிக்குமார், குலோத்துங்கன், வை. முருகானந்தம், க.கருப்புசாமி, க.செல்வராஜ், ம.ஜெயக்குமார்

பொன். செல்வம், அருண் ராஜா, இளங்கோவன், சஞ்சய் குமார் ஜோ.வின்சன் ராஜா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சிகழக தோழர்கள், அனைத்து அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### ஒருங்கிணைந்த தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டக் கழகங்களின் முன்னாள் செயலாளர் - கழக முன்னோடி

# எம்.சென்ன கேசவன் துணைவியார் திருமதி செ.அமராவதி அம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 30-

ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்தவரும், கழக மூத்த முன்னோடியுமான எம். சென்ன கேசவன் அவர்களின் துணைவியார் - திருமதி செ.அமராவதி அம்மாள் அவர்கள் மறைவுற்றார்.

இம்மறைவுச் செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்ன கேசவன் - அமராவதி அம்மாள் ஆகியோரின் புதல்வர்களான - இனாம் காட்டுப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் செ.மனோகரன், சாமல்பட்டி வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளர் செ.சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் செ.கார்த்தி கேயன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், அன்னாரின் மறைவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கன மழை காரணமாக மழைநீர் சூழ்ந்துள்ள பகுதிகளை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தரங்கம்பாடி பேரூர் கழக செயலாளர் முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுணசங்கரி குமரவேல், துணை தலைவர் பொன். இராஜேந்திரன், மாவட்ட கழக பிரதிநிதி சடகோபன், துணை செயலாளர் பால்ராஜ், பேரூர் பொருளாளர் நந்தா, ஒன்றிய பிரதிநிதி ராஜா, வார்டு செயலாளர் சாத்ராக், சீனிவாசன், தரங்கம்பாடி வார்டு கவுன்சிலர்கள் ஜோன்ஸ் செல்லப்பா, ரமேஷ் , மாவட்ட பிரதிநிதி ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

### பெண்ணடிமை முறைகளைத் தகர்த்து - பெண்ணுரிமைகளைப் பெற்றிட

# திராவிடக் கருத்தியல் சிந்தனைகள் வழித்தடம் அமைத்திடும்!

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”**

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”**

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்”**

எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் முன்மொழிந்த சமூக அறம்சார்ந்த விழுமியங்களை அடிப்படையாகவும், வழிக்காட்டும் நெறிகளாகவும் கொண்டு அனைத்து மக்களுக்குமான பொது உரிமையை நிலைநாட்டுவதை திராவிடக் கருத்தியல் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது. , 'பகுத்தறிவு', ‘தன்மானம்’, ‘பொதுநலன்’, ‘சமஉரிமை’ ஆகியவற்றுடன் பெண்ணுரிமையும் பெண்ணடிமைத்தன ஒழிப்பும் இக் கருத்தியலின் அடிப்படைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட இனக்குழு தன்னலத்திற்காக ஒட்டுமொத்த சமூக வளர்ச்சிக்கும் எதிரான சிந்தனைகளை தெய்வக் கட்டளை எனும் பெயரில் சனாதனக் கோட்பாடாக உருவாக்கி வைத்திருக்கிறது. மனித இனத்தை மதம், வருணம், சாதி மற்றும் பால் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தி, ஆண்களுக்கு நிகரான உயிரியல் பண்புகளைக் பெற்றுள்ள பெண்களை அடிமைப்படுத்துவதும், சமூக சமத்துவத்தைச் சீர்குலைத்து, சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்தவும் வல்ல அறிவுக்கு எதிரான சிந்தனை மரபு சனாதனம் ஆகும். சனாதனம் என்பது பெண்ணடிமைத்தனத்திற்கு மட்டுமின்றி அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும், அடிமைத்தனத்திற்கும் வழி வகுக்கும் அடிப்படைவாதம் என்பதை முழுமையாக ஆய்ந்தறிந்து, அதற்கு எதிர் வினையாக தம் வாழ்நாள் முழுவதும் ஓயாத சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டவர் தந்தை பெரியார் ஆவார். ஆண்களுக்கு நிகரான உரிமைகள் அனைத்தையும் பெண்கள் பெற்றிட வேண்டுமென்ற சிந்தனைகளை தமிழ்நாட்டில் தந்தை பெரியார் அவர்கள் பூதாகரமாக எழுப்பியதோடு அந்த லட்சியங்களை முழுமையாக அடைவதற்கு திராவிடர் கழகம் என்ற இயக்கத்தை உருவாக்கி நிலைபெறச் செய்தார் என்பது வரலாறு.

பெண்கள் திராவிடக் கருத்தியலால் பெற்ற எழுச்சி, திராவிட மாடல் அரசால் அடைந்துகொண்டிருக்கும் முன்னேற்றம் ஆகியவை அளப்பரியவை. பெண் கல்வி பெண்விடுதலையின் முக்கியத் துருப்பாக அமைகிறது. மக்களிடம் வைதீகத்தின் மீதான குருட்டு நம்பிக்கை புரையோடிப் போயிருந்த ஒரு காலத்தில், ‘பெண்கல்வி மறுக்கப்பட்டது; சூத்திரர்களுக்கும், பெண்களுக்கும் கல்வி கிடையாது’ என்ற நிலை இருந்தது. 1901 இல் தமிழ்நாட்டில் படித்த பெண்களின் எண்ணிக்கை 1% சதவிகிதத்திற்கும் கீழ் இருந்தது. ஆனால் இப்போது 75% சதவிகிதம் பெண்கள் கல்வி அறிவு பெற்றுள்ளார்கள். உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை 50% சதவிகிதத்தைக் கடந்து வளர்ந்து வருகிறது. இன்று, பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சாதிக்கின்றார்கள். ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்கச் செயல்பாடுகளும் அரைநூற்றாண்டு கால திராவிட ஆட்சியும்தான் இதற்குக் காரணம் என்பது வெள்ளிடை மலை.

கல்விக்கு அடுத்த நிலையில் ஒரு பெண்ணின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமாக அமைவது பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் "Financial independence" ஆகும். ‘பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறினால்தான் ஒருங்கிணைந்த சமூக வளர்ச்சி ஏற்படும், எதிர்காலச் சந்ததியினர் நல்வாழ்வு பெற முடியும்’ என்று சிந்தித்தார் தந்தை பெரியார். அதனால் தான் 1929 ஆம் ஆண்டு பிப்ரவரி 17ஆம் தேதி துவங்கிய முதல் சுயமரியாதை இயக்க மாநாட்டில், ‘பரம்பரை சொத்துகளில் ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் உரிமை தர வேண்டும்’ என்கிற தீர்மானத்தை நிறைவேற்றினார். ஆனால், 1956 Hindu Succession Act பரம்பரைச் சொத்தில் பெண்கள் நேரடியாகப் பங்கைப் பெற முடியாது என்று கூறியது. இதை மாற்றி, 'பெண்கள் நேரடியாகச் சொத்தில் பங்கைப் பெற முடியும்' என்று 07.05.1989-ஆம் நாளன்று, 'தந்தை பெரியார் வாழ்க! பேரறிஞர் அண்ணா வாழ்க!' என்ற முழக்கத்துடன் வரலாற்றுச் சிறப்புமிக்க பெண்களுக்குரிய சொத்துரிமைத் தீர்மானத்தைச் சட்டமாக நிறைவேற்றினார் முத்தமிழ் அறிஞர் கலைஞர். இவ்விடம் பெண்களின் சொத்துரிமை குறித்த தந்தை பெரியாரின் தொடர் வலியுறுத்தல் நினைவு கூரத்தக்கது

சமூகத்தில் சரிபாதியுள்ள பெண்களின் அரசியல் உரிமை (Second Sex), "Women's political participation and their role in decision making power is essential in creating a gender equal world" இன்று மிகவும் அவசியமானது. பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டிருந்த காலத்தில் 'பெண்கள் தேர்தலில் வாக்களிக்கக் கூடாது' என்று இருந்த தடையை தந்தை பெரியார் அவர்களின் வலியுறுத்தலின்படி, அரசு ஆணை எண் 108, நாள் 10.05.1921 இன் மூலம் அன்றைய நீதிக்கட்சி அரசு நீக்கியது. 1921 ஆம் ஆண்டு முதன் முதலாக சென்னை மாகாணத்தில் பெண்கள் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றார்கள்.

இன்றைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்துள்ள மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் கல்வி உதவித்தொகைத் திட்டம், அரசுப் பள்ளிகளில் பயின்ற ஏழை எளிய கிராமப்புற மாணவிகளின் உயர் கல்வி வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக அமைந்திருக்கிறது. மகளிர் உரிமைத் தொகை திட்டம், பெண்களுக்கான கட்டணம் இல்லா பேருந்துப் பயணத்திட்டம் உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் முன்மாதிரித் திட்டங்கள் பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்கின்றன. குறிப்பாக மகளிர் உரிமைத் தொகை திட்டமானது இந்திய ஒன்றியத்தின் பல மாநில அரசுகளின் கவனத்தையும் ஈர்த்து வருவதோடு பல கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் தவிர்க்கவியலாத வாக்குறுதியாகவும் இடம்





இடம்பெறுகிறது.

இப்போது நமது தமிழக முதல்வர் அவர்களால் உயர் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ‘நான் முதல்வன் திட்டம்’ ஒரு தொலைநோக்குத் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தின் மூலம் மாணவ மாணவியர் மென் திறன்களையும், தொழில்நுட்பத் திறன்களையும் மேம்படுத்திக் கொள்வதோடு, தங்களது பட்டப்படிப்பை முடிப்பதற்குள் 4 சான்றிதழ்களைப் பெற முடியும். அத்துடன் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் பணி வாய்ப்புகளையும் பெறுகின்றனர். குறிப்பாக, உயர்கல்வி பயிலும் பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற இத்திட்டம் ஒரு நல் வாய்ப்பாக அமைகிறது.

உலக நாடுகளில் எங்கெல்லாம் மனிதர்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் எல்லாக் காலத்திலும் சமூக ஏற்றத்தாழ்வுகளும், பெண் அடிமைத்தனமும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற குரல் நிரந்தரமாக ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும். தந்தை பெரியாருடைய இந்த சமூக நீதிக் குரல், பெண்ணுரிமைக்கான குரல், ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கோ அல்லது ஒரு சில குறிப்பிட்ட தேசிய இனங்களுக்கோ உரித்தானது மட்டுமல்ல, சமூக



**முனைவர் மு. தேன்மொழி,**
மாநில ஒருங்கிணைப்பாளர்,
திராவிடக் கருத்தியல்
ஆசிரியர் சங்கம்.

ஏற்றத்தாழ்வுகளும், பெண் அடிமைத்தனமும் எங்கெல்லாம் தலைதூக்குகிறதோ அங்கெல்லாம் தந்தை பெரியாரின் இந்த முழக்கங்கள் எழுப்பப்பட வேண்டுமென தொலைநோக்குப் பார்வையோடு இந்த சமத்துவக் கோட்பாடுகளை முன்மொழிந்ததோடு, அதனைத் தொடர்ந்து மனித குலத்திற்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும் வகையில் தந்தை பெரியாரும் பெரியாரியவாதிகளும் அதற்கான அமைப்புகளையும் நிறுவனங்களையும் உருவாக்கியுள்ளனர்.

இன்று, உலகம் முழுவதும் தந்தை பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துகள் பரவி வருகின்றன. உதாரணமாக தென்கொரியாவில் பெண்கள் தங்களுடைய உரிமைகளை மீட்டெடுக்கவும் தங்கள் சுய அடையாளங்களை தேடிக் கொள்ளவும் ‘4பி’ என்ற இயக்கம் தொடங்கப்பட்டு அதற்கு மிகப்பெரிய ஆதரவு கிடைத்திருக்கின்றது. கொரியாவில் தொடங்கிய இந்த இயக்கம் தற்பொழுது அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவத் தொடங்கியுள்ளது. இந்த நூற்றாண்டின் பெண் உரிமைக் குரலாக ‘4 பி’ இயக்கம் கவனம் பெற்றுள்ளது. அமெரிக்காவில் வலுப்பெற்றருக்கும் வலதுசாரி கருத்தாக்கம், பெண் உரிமைகளுக்கு எதிராக செயல்படும் என்ற காரணத்தால், இந்த இயக்கம் தற்பொழுது வலுப்பெற்று வருகிறது. ஆண்களுக்கு நிகரான ஊதியம் மறுக்கப்படுவதை எதிர்த்தும், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு சுதந்திரம் பெண்களின் அடையாளங்களாக இருக்க வேண்டும் என்று இவ்வியக்கம் வலியுறுத்துகின்றது. சமூக சமத்துவமும், பொருளாதார சுதந்திரமும் தான் இன்று பெண்களின் அடிப்படை தேவைகளாக இருக்கின்றன. பெண்கள் தங்களை அழகுப்படுத்திக் கொள்வது, அழகு சிகிச்சை எடுத்துக் கொள்வது, ஆடைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது போன்ற எண்ணங்களில் இருந்து விடுபட வேண்டும் என்று இவ்வியக்கம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தந்தை பெரியார் அவர்களின் கொள்கை இன்று உலகமயமாக்கப்பட்டு வருகிறது என்பது நாம் பெருமைப்படக்கூடிய நிகழ்வாகும். எனவே, போராடும் பெண்கள் தந்தை பெரியாரை ஏந்தினால் போராட்டம் அர்த்தம் பெறும் என்பது உறுதியாகின்றது. தந்தை பெரியாரின் கருத்தியல் சிந்தனைகள் அன்றும், இன்றும், என்றும் என்கின்ற தொலைநோக்குப் பார்வையுடன் திராவிடக் கருத்தியல் ஆசிரியர் அமைப்பு எதிர்காலப் பணிகளை கட்டமைத்துக் கொள்ளும் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஜனநாயக ஆட்சி முறையில், சமூக நீதிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட திராவிடக் கருத்தியல் கோட்பாடுகளை வருங்கால சமுதாயத்தின் வார்படங்களாக, எதிர்கால சமுதாயக் கட்டமைப்பை நிர்மாணிக்கவிருக்கும் இருபால் இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் திராவிடக் கருத்தியல் சிந்தனைகள் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும், காரிருளில் வழிகாட்டும் விடிவெள்ளியாகவும் துணைபுரிகின்றன. இந்த அடிப்படையில் எதிர்கால இருபால் இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனைக்கு தூண்டுகோலாகவும், வழிகாட்டியாகவும் திராவிடக் கருத்தியல் ஆசிரியர் அமைப்பு உருவாகியுள்ளது. திராவிடக் கருத்தியல் சிந்தனைகளே எங்கள் அமைப்பின் உயிர் மூச்சாகவும் உறுதியான நிலைப்பாடாகவும் உள்ளன என்பதனை இவ்விடத்தில் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.